Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 23.06.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 23.06.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மக்களை மையமாகக் கொண்ட நிர்வாகத்திற்கு, அதிகாரிகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சிறந்த தேச பக்தரும், அறிஞரும் – ராஜதந்திரியுமான டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி நினைவு நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார்.

வேளாண் கொள்முதல் நடைமுறைகளில், விவசாயிகளுடன் நேரடித் தொடர்புகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை, மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தி உள்ளார்.

கத்தார் தீ விபத்தில், தமிழகத்தைச் சேர்ந்த 3 இளைஞர்கள் உயிர் இழந்தது குறித்து, முதலமைச்சர் திரு. விஜய் துயரம் வெளியிட்டுள்ளார்.

*மோடி – அதிகாரிகள்-1 (6)*

அதிகாரிகள், மக்களை தெய்வமாக கருதி, மக்களை மையமாகக் கொண்டதாக, நிர்வாகத்தை செயல்படுத்த வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். 2024ஆம் ஆண்டுப் பிரிவைச் சேர்ந்த

183 ஐஏஎஸ் பயிற்சி அதிகாரிகள் இன்று புதுடெல்லியில் பிரதமரை சந்தித்த போது, முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், இளம் அதிகாரிகள் தான், முக்கிய பங்காற்ற முடியும் என்றார். பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்…

(வாய்ஸ்)

*மோடி – அதிகாரிகள்-2 (18)*

(வாய்ஸ்)

நாட்டிற்கான உன்னத நோக்கங்களின் அடிப்படையில், புதுமையான விதங்களில் நாட்டை கட்டியமைக்க, இளம் அதிகாரிகள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்றும், நாட்டின் முக்கிய பிரச்சனைகளை தீர்ப்பதில், அனைத்துத் துறைகளையும் முழுமையாக ஈடுபடுத்தும் அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார். 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், சுயசார்பு இந்தியா, மேக் இன் இண்டியா போன்ற திட்டங்களுக்கும், எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கும் முக்கிய பங்கு இருப்பதால், அதிகாரிகள் இத்தகைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தில் அரசு நிர்வாகத்தில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதையும், நடைமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நிலை மாறி, விளைவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அணுகு முறை, தற்போது கடைபிடிக்கப் படுவதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார். வளர்ச்சியில் பெண்களின் பங்கு அதிகரித்து வருவதாகவும், ஐஏஎஸ் அதிகாரிகளில் மகளிர் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதே இதற்கு சான்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*மோடி – முகர்ஜி (11)*

சிறந்த தேச பக்தரும், அறிஞரும் – ராஜதந்திரியுமான டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி நினைவு நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார். நாட்டின் வளர்ச்சிக்காக வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர், டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜியின் அயராத கடமை பற்றும், தேச நலன் மற்றும் பொது வாழ்வில் அவர் காட்டிய துணிச்சலும், பல தலைமுறைகளுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி வாழ்வின் கடைசி மூச்சு வரை வாழ்ந்து காட்டிய பாதையில், வலுவான முன்னேறிய இந்தியா ஒன்றை உருவாக்க மக்கள் அனைவரும் மறு உறுதி ஏற்க வேண்டும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

*பத்ம விருதுகள் (9)*

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, குடியரசுத் தலைவர் மாளிகையில், இன்று மாலை நடைபெற்ற, 2ஆம் கட்ட பத்ம விருதுகள் வழங்கும் விழாவில், விருதாளர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். பத்திரிக்கையாளர் திரு. P. நாராயணன், முன்னாள் நீதிபதி திரு. K.T. தாமஸ் ஆகியோருக்கு பத்ம விபூஷன் விருதும், முன்னாள் டென்னிஸ் வீரர் திரு. விஜய் அமிர்தராஜ், நடிகர் மம்முட்டி, பின்னணி பாடகி அல்கா யாக்னிக் உள்ளிட்டவர்களுக்கு பத்ம பூஷன் விருதும் வழங்கப்பட்டது. இவ்வாண்டு மொத்தம் அறிவிக்கப்பட்ட 133 பத்ம விருதுகளில், 5 பத்ம விபூஷன் விருதுகளும், 13 பத்ம பூஷன் விருதுகளும், 113 பத்ம ஸ்ரீ விருதுகளும் அடங்கும்.

*பிரிக்ஸ் (14)*

ஈரான் – அமெரிக்கா இடையே எட்டப் பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த்தை இந்தியா வரவேற்றுள்ளது. இந்த உடன்பாட்டினால் உலகம் முழுவதிலும், எரிசக்தி பாதுகாப்பு வலுப்பெறும் என்று, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல், இன்று புதுடெல்லியில், பிரிக்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மாநாட்டில் பேசுகையில் கூறினார். ஹோர்மூஸ் நீரிணை திறக்கப் படுவதால், உலக அளவிலான பொருள் விநியோகச் சங்கிலியில் தடைகளும், உரங்கள் மற்றும் ரசாயனங்களின் பற்றாக் குறையும் நீங்கும் என அவர் தெரிவித்தார். உலக அளவில் தற்போது ராணுவப் பிணக்குகள், பொருளாதார நெருக்கடிகள் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களால், கொந்தளிப்பான சூழல் ஏற்பட்டுள்ளதாக, திரு. அஜீத் தோவல் கூறினார். உலக நாடுகளின் பாதுகாப்பு கவலைகளும் அதிகரித்து வரும் நிலையில், வெவ்வேறு கண்டங்களைச் சேர்ந்த பிரிக்ஸ் நாடுகள், தங்களின் பலதரப்பட்ட அனுபவங்கள் மூலம், வேகமான மாற்றங்களை சமாளிப்பதில் முக்கிய பங்களிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*கியூட் தேர்வு (4)*

மத்திய பல்கலைக் கழகங்களின் இளங்கலை மாணவர் சேர்க்கைக்கான கியூட் நுழைவுத் தேர்வு முடிவுகளை தேசிய தேர்வு முகமை இன்று வெளியிட்டுள்ளது. தேர்வு எழுதிய மாணவர்கள் அதிகாரப் பூர்வ கியூட் இணையதளம் மூலமாக, முடிவுகளை தெரிந்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*குஜராத் பள்ளி (8)*

குஜராத்தில் பள்ளி அளவிலான மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்கும் வகையில், மாநில அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 24ஆம் ஆண்டு பள்ளிப் பிரவேச உற்சவத்தை, முதலமைச்சர் திரு. பூபேந்திர யாதவ், இன்று தொடக்கி வைத்தார். வாத்நகரில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பயின்ற பி.என். உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற

இவ்விழாவில், திரு. யாதவ் பேசுகையில், சாதாரண பின்னணியில் இருந்து வரும் மாணவர்கள் கூட, கல்வி மற்றும் திடமான மன உறுதி மூலம், எந்த அளவிற்கு உயர முடியும் என்பதற்கு, பிரதமரின் வாழ்க்கைப் பயணமே சான்றாகும் என்றார்.

*அமித் ஷா – விவசாயம் -1 (7)*

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று புதுடெல்லியில், தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பின், ஏல நடைமுறைகளுக்கான இணையதளத்தை தொடக்கி வைத்தார். வேளாண் விளை பொருட்களின் ஏலத்தில், வெளிப்படைத் தன்மை, மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக இந்த NAFED இணையதளம் அமைந்துள்ளது. விழாவில் அமைச்சரின் உரை குறித்து ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

*அமித் ஷா – விவசாயம் -2 (12)*

(வாய்ஸ்)

NAFED விழாவில், மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா பேசுகையில், வேளாண் கொள்முதல் நடைமுறைகளில் இடைத் தரகர்களை முழுமையாக தவிர்த்து, விவசாயிகளுடன் நேரடித் தொடர்புகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். NAFED கூட்டமைப்பு கடந்த 12 ஆண்டுகளில், கடும் நிதி நெருக்கடியில் இருந்து மீண்டு, 74 லட்சம் விவசாயிகளுக்கு சேவை புரியும் வலுவான அமைப்பாக தற்போது மேம்பட்டுள்ளதாக, அவர் தெரிவித்தார்.

இன்று ஜூன் 23ஆம் தேதி டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி நினைவு நாள் கடைபிடிக்கப் படுவதை திரு. அமித் ஷா தமது உரையில் சுட்டிக் காட்டி, ஜம்மு – காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய

370ஆவது அரசியல் சாசனப் பிரிவை கடுமையாக எதிர்த்தவர், சியாமா பிரசாத் முகர்ஜி என்றும், தற்போது 370ஆவது அரசியல் சாசனப் பிரிவு நீக்கப்பட்டதன் மூலம், அன்னாரின் கனவு நனவாக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

*அமித் ஷா – விவசாயம் -3 (10)*

ஏல நடைமுறைகளுக்கான NAFED இணைய தளத்தின் தொடக்கி விழாவில், மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சவுகான், பேசுகையில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தில், நாட்டின் வேளாண் உற்பத்தி கணிசமான அளவில் அதிகரித்து இருப்பதாகக் கூறினார். புதிய NAFED இணைய தளத்தினால், விவசாயிகள் தங்களுக்கு சேர வேண்டிய பணத்தை, 48 மணி நேரத்திற்குள் வங்கிக் கணக்கில் பெற ஏதுவாகும் என்று அவர் தெரிவித்தார்.

இவ்விழாவின் போது, விவசாயிகளின் குழந்தைகளுக்கான நாஃபெட் – கல்யாண் கல்வி உதவித் தொகைத் திட்டம் உட்பட தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பின் வேறுபல டிஜிட்டல் முன் முயற்சிகளையும், மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா, தொடக்கி வைத்தார்.

*தமிழ்நாடு – கத்தார் (8)*

கத்தார் நாட்டில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில், தமிழகத்தைச் சேர்ந்த 3 இளைஞர்கள் உயிர் இழந்தது குறித்து, முதலமைச்சர் திரு. விஜய் துயரம் வெளியிட்டுள்ளார். இவர்களின் குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இறந்து போனவர்களின் உடல்களை, விரைந்து தமிழகத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும், வெளியுறவு அமைச்சகம் மற்றும் கத்தாரில் உள்ள இந்தியத் தூதரகத்தின்

ஒருங்கிணைப்புடன் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும், தமிழக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

*தமிழ்நாடு – சோதனை (6)*

தமிழகத்தில், ஆசிரியர் ஆள் சேர்ப்புத் தேர்வு முறைகேடுகள் தொடர்பாக, அமலாக்கத் துறை அதிகாரிகள் இன்று, சென்னை, திருச்சி, கோவை மற்றும் மதுரையில் 18 இடங்களில், அதிரடி சோதனை மேற்கொண்டனர். 2017ஆம் ஆண்டு, மத்திய குற்றப்பிரிவு போலிசாரால் பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில், இவ்வாறு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக, அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

*வானிலை (12)*

வளிமண்டல சுழற்சி காரணமாக, இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வடதமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 29ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில், 17 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

*கால்பந்து (9)*

FIFA உலகக் கோப்பை கால்பந்துப் போட்டித் தொடரில், இந்திய நேரப்படி இன்று இரவு, பத்தரை மணிக்கு, ஹூஸ்டனில் நடைபெறும் போட்டியில், போர்ச்சுகல் – உஸ்பெகிஸ்தான் அணிகள் மோத உள்ளன. முன்னதாக, ஜோர்டான் – அல்ஜீரியா அணிகளுக்கு இடையே, இன்று சாண்டா கிளாராவில் நடைபெற்ற போட்டியில், அல்ஜீரியா அணியும், நார்வே – செனகல் அணிகளுக்கு இடையே, நியூயார்க்கில் நடைபெற்ற போட்டியில், நார்வே அணியும் வெற்றி பெற்றன. பிரான்ஸ் – ஈராக் அணிகளுக்கு இடையே நடைபெற்ற மற்றொரு போட்டியில், பிரான்ஸ் அணி, 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

*ஒலிம்பிக் வாழ்த்து (10)*

சர்வதேச ஒலிம்பிக் தினத்தை ஒட்டி, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வாழ்த்துத் தெரிவித்துள்ளார். விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து, நாட்டு மக்கள் அனைவரும், விளையாட்டை வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்கும் வகையிலான, மாபெரும் விளையாட்டுப் புரட்சி ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நாடு சந்தித்து வருவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அமைச்சர் கூறியுள்ளார். விளையாட்டுத் துறையில் உன்னதம், நட்புறவு மற்றும், பரஸ்பர மரியாதையை உறுதிப் படுத்தும் வகையிலான ஒலிம்பிக் லட்சியங்களை இன்றைய தினம் நாடு கொண்டாடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

*அயோத்தி – விசாரணை (8)*

அயோத்தி ராமர் கோவிலுக்கு பக்தர்கள் வழங்கிய நன்கொடை பணத்தில் கையாடல் நடந்து இருப்பதாக புகார்கள் வெளியானதைத் தொடர்ந்து, கோவிலில் நிர்வாக அறக்கட்டளை விடுத்த வேண்டுகோளின் பேரில், உத்தரப்பிரதேஷ் மாநில அரசால் நியமிக்கப்பட்ட சிறப்பு

புலனாய்வுக் குழுவினர், இன்று தங்களின் பூர்வாங்க விசாரணை அறிக்கையை மாநில உள்துறையிடம் சமர்ப்பித்து உள்ளனர். இந்த 3 உறுப்பினர் குழுவின் தலைவர் திரு. வி.வி. பந்த், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், கடந்த ஒரு வார காலத்தில், அதிகாரிகள் உட்பட சந்தேக நபர்கள் பலரிடம் தாங்கள் விசாரணை மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மக்களை மையமாகக் கொண்ட நிர்வாகத்திற்கு, அதிகாரிகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சிறந்த தேச பக்தரும், அறிஞரும் – ராஜதந்திரியுமான டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி நினைவு நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார்.

வேளாண் கொள்முதல் நடைமுறைகளில், விவசாயிகளுடன் நேரடித் தொடர்புகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை, மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தி உள்ளார்.

கத்தார் தீ விபத்தில், தமிழகத்தைச் சேர்ந்த 3 இளைஞர்கள் உயிர் இழந்தது குறித்து, முதலமைச்சர் திரு. விஜய் துயரம் வெளியிட்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / CN / RK